IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

MCOP.NO. - 462/2017 and 463/2017

R.W.1 - G. Sendhil Kumar, S/o. M. Ganesan

DATE - 22.04.2024

எ.ம.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு 4 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். என்னுடைய புலனாய்வு அறிக்கையை எங்கள் நிறுவனத்தில் நான் சமர்ப்பிக்கப்பட்ட தேதி என்ன என்றால் 27.08.2018 ஆகும். விபத்து நடந்த தேதி என்ன என்றால் 29.09.2016. கிட்டதட்ட 2 1/2 ஆண்டுகள் கழித்து தான் விபத்து குறித்த புலனாய்வு அறிக்கையை சமர்பித்துள்ளேன் என்றால் 2018 ல் தான் எனக்கு விசாரணை செய்யத உத்தரவு வழங்கினார்கள். எந்த தேதியில் அந்த உத்தரவு எனக்கு வழங்கப்பட்டது என்றால் நான் அறிக்கையை தாக்கல் செய்த தேதிக்கு 30 நாட்கள் முன்னர் வழங்கப்பட்டது. என்னுடைய அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள விபத்து நடந்த இடத்திற்கான புகைப்படத்தின் நகல் 21.01.2018 அன்று புகைப்படம் எடுக்கபட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி புகைப்படத்தில் ஊரின் பெயர் பலகை மட்டும் தான் காட்டப்பட்டுள்ளது என்றால் அந்த புகைப்படம் சம்பவம் நடந்த பகுதியை காண்பிக்க வேண்டி எடுக்கப்பட்ட புகைப்படம் ஆகும். நான் மேற்கொண்ட புலன் விசாரணை இந்த வழக்கு விபத்திற்காக அல்ல என்றாலும் வேறு விசாரணைக்காக

எடுக்கப்பட்டுள்ள புகைப்படத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று என்னுடைய முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் எதன் அடிப்படையில் எனக்கு தெரிய வந்தது என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் தனித்தனியாக குறிப்பிடவில்லை. எனது விசாரணை அறிக்கையில் பத்தி 1ல் கார் ஓட்டுநரின் ஆஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் பத்தி 1 ல் குறிப்பிடவில்லை. வேறு எங்கும் குறிப்பிடவில்லை. என்னுடைய அறிக்கையில் லாரியின் ஓட்டுநரிடம் விசாரித்த போது அவர் காரின் ஓட்டுநர் மீது தான் ஆக்கிரரை என்று சொல்லியு்ளளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அவ்வாறு அவர் கூறியதாக அவரிடம் எழுத்து மூலமான வாக்குமூலம் பெற்றுள்ளேனா என்றாலும்அவரை சந்தித்ததற்கான புகைப்படத்தை என்றுடைய அறிக்கையில் இணைத்துள்ளேனா என்றால் அவரை விசாரணை செய்த போது அவர் வழக்கறிஞரை நியமித்துள்ளதாக சொன்னதால் எழுத்து மூலமான வாக்குமூலம் பெறவில்லை மற்றும் புகைப்படம் எடுக்கவில்லை. நான் அவரை சந்திக்கவில்லை என்றும் அவரை சந்தித்ததாக என்னுடைய விசாணை அறிக்கையில் பொய்யாக தயார் செய்து குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் அறிக்கையில் 1 பத்தியல் கடைசி 4 வரிகளில் லாரி பதிவு எண் டிஎன் 04 எசி 5187 என்ற வாகனத்தின் ஓட்டுநர் மீது தான் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி லாரியின்

உரிமையாளரிடம் எந்தவித எழுத்துவிதமான வாக்குமூலமும் நான் பெறவில்லை என்றால் சரிதான். நான் மனுதாரர்களை விசாரிக்க சென்ற போது மனுதாரர்கள் விபத்து குறித்து முதல் தகவல் அறிக்கை மற்றும் மனுவிலும் சொன்ன சாராம்சம் உள்ளபடி தான் விபத்து நடந்தது என்று என்னிடம் தெரிவித்தார்கள் என்று விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய விசாரணை அறிக்கையில் ஒபினியன் என்ற தலைப்பில் பத்தி 3ல் லாரி பதிவு எண் டிஎன் 04 எசி 5187 வண்டியின் ஆவணம் ஆர்சி பர்மிட் பாலிசி மற்றும் அந்த வண்டியை ஓட்டியவரின் ஓட்டுநர் உரிமம் ஆகியவை விபத்து தேதியில் நடைமுறையில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய விசாரணை அறிக்கையில் ஒபினியன் என்ற தலைப்பில் பத்தி 6ல் சம்பவம் இடம் குறித்து நான் விசாரணை செய்ததில் சம்பவம் குறித்து எவ்வாறு நடந்தது என்று பார்த்த நபர்களிடமோ அங்குள்ள நபர்கிளடமோ எழுத்து மூலமான வாக்குமூலமோ வாய்மொதி வாக்குமூலமோ என்னால் பெறவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் 2ம் பக்கத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள லாரியின் ஓட்டுநர் மீது 2ம்மனுதாரர் தன்னுடைய ஆதிகத்தை பயன்படுத்தி லாரியின் ஓட்டுநர் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ள சங்கதியை என்னுடைய விசாரணை அறிக்கையில் எங்கும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். லாரியின் உரிமையார் மற்றும் ஓட்டுநருக்கு அனுப்பியுள்ள அறிக்கையின் நகலின் ஒப்புதல் அட்டையை ஏதாவது இணைத்துள்ளீர்களா என்றால் ஒப்புதல் அட்டை ஏதும் இணைக்கவில்லை போஸ்டல் ரசீது மற்றும்

ஒட்டப்பட்டுள்ளது.  என் பிரமாண வாக்குமூலம் மற்றும் அறிக்கையில் உடன் இணைத்துள்ள மாதிரி வரைப்படத்தில் லாரிக்கு நேர் பின்புறமா கார் நிற்பதாக வரைபடத்தில் உள்ளது என்றால் சரிதான்.  நான் முதல் விசாரணையிலும் என்னுடைய விசாரணை அறிக்யையிலும் வலது புறமாக கார் திரும்பி லேன் தவறி சென்று விபத்தை ஏற்பட்டதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.  2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் கேட்டுக்கொண்டதற்காக எந்த விதமான ஆவணமும் ஆதாரமும் இல்லாமல் சரிவர புலன் விசாரணை செய்யாமல் 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்ட லாரி மீது தவறில்லாதது போல் மேற்படி நிறுவனத்தை காப்பாற்ற வேண்டுமென்று என்ற நோக்த்தோடு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

P REVATHY
Digitally signed by P REVATHY